[2021 பிப்ரவரி 5

(ஆ) டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய பெயரிலே ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.